RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt2224s-222920

# சரோஜா பாண்டியன் படைப்புகளில் உளவியல்

## ஜெ. அமுதா [அ, *]

[அ] தமிழ்த்துறை, ஸ்ரீ காளீஸ்வரி கல்லூரி (தன்னாட்சி), சிவகாசி-626130, தமிழ்நாடு, இந்தியா.

# Psychology in the Works of Saroja Pandyan

## J. Amutha [a, *]

[a] Department of Tamil, Sri Kaliswari College (Autonomous), Sivakasi-626130, Tamil Nadu, India

* Corresponding Author: amuthapriyanka@gmail.com

Received: 10-09-2022
Revised: 17-11-2022
Accepted: 20-11-2022
Published: 05-12-2022

Check for updates

**ABSTRACT**

Today's literature reflects people's lives and also covers social problems. The novel and the short story excelled in the literary genres of the twentieth century. They create works by mixing a bit of imagination with current events. Not all creations created in this way are special. However, the timeless, thought-provoking short stories and novelties are still popular among people today. Saroja Pandiyan's short stories and novels are situated from various angles. Some short stories and a novel Uran Pillai have been composed by him on psychological basis. This article explores the child psychology and emotions found in the paintings.

**Keywords:** Child Psychology, Saroja Pandyan, Uran Pillai, Emotion

## முன்னுரை

இன்றைய இலக்கியம் மக்களின் வாழ்வைப் பிரதிபலிப்பதோடு சமுதாயப் பிரச்சனைகளையும் உள்ளடக்கமாகக் கொண்டுள்ளது. இருபதாம் நூற்றாண்டின் இலக்கிய வகைகளில் புதினம், சிறுகதை சிறந்து விளங்குகின்றன. நடப்பியல் உண்மை நிகழ்வுகளில் சிறிது கற்பனையைக் கலந்து படைப்பை உருவாக்குகிறார்கள். இவ்வாறு உருவாக்கப்படும் படைப்புகள் அனைத்தும் சிறப்புப் பெறுவதில்லை. ஆயினும் காலம் கடந்து வாழும் தன்மை பெற்ற, கருத்தாழம் மிக்க சிறுகதைதள், புதினங்கள் இன்றளவும் மக்களிடையே வரவேற்பைப் பெற்றிருக்கின்றன. சரோஜா பாண்டியனின் சிறுகதைகள் மற்றும் புதினங்களைப் பல்வேறு கோணங்களில் அமைந்துள்ளன. அவரது படைப்புகளை உளவியல் நோக்கில் சில சிறுகதைகளையும் ஊரான் பிள்ளை நாவலையும் அமைத்துள்ளார். அப்படைப்புகளில் காணலாகும் குழந்தை உளவியல் மற்றும் மனவெழுச்சி குறித்து ஆராய்வதாக இக்கட்டுரை அமைந்துள்ளது.

## உளவியல் விளக்கம்

உளவியல் என்பது “உள்ளத்தின் கோலங்களையும் கோணங்களையும் அதன் விழைவுகளையும் விளைவுகளையும் ஆராய்கிற ஓர் அறிவியலாகும்” என்கிறார் தி.சு.நாடராஜன் (Natarajan, 1990). தமிழ்ச் சொல்லகராதி ‘உளவு என்பதற்கு இரகசியம், உட்காரியம், உட்கிடை” என்று பொருள் கூறுகிறது. இதன் வாயிலாக மனிதனின் நடத்தையைப் பற்றியும், அவனது நடத்தைக்குள் மறைந்திருக்கும் காரணத்தைப் பற்றியும் ஆராய்வதே உளவியல் என்பது பெறப்படுகிறது.

## குழந்தை உளவியல்

உறவை இழந்த நிலை, மாற்றத்தை ஏற்க இயலாத நிலை, புறக்கணிக்கப்படும் நிலை, பெற்றோர்களின் தகாத ஒழுக்கத்தால் இழிவுக்குட்படும் நிலைஆகியவற்றால் குழந்தைகள் மனச்சிக்கலுக்கு உள்ளாகின்றனர் என்கிறார்.

## உறவை இழந்த நிலை

ஒரு குழந்தையின் அன்றாடத் தேவைகளைப் பாசத்துடனும் விருப்பத்துடனும் செய்து வருபவர்களையே குழந்தை விரும்பும். அக்குண நலன்களுடைய ஒருவரை இழக்கும்போது அன்புக்காக ஏங்கும் குழந்தையை ஆசிரியர் "செத்த பிறகு சிலை எடுப்பார்" என்ற சிறுகதையில் சித்தரித்துள்ளார். இச்சிறுகதையில் இடம் பெறும் ரவி வயதுச் சிறுவன். ரவியின் அம்மா பணிக்குச் செல்வதால் அவனது பாட்டியே பெரும்பாலும் கவனித்து விடுவாள். அவனது பாட்டி இறந்த பின்பு ரவி பள்ளிக்குச் சென்று வீட்டுக்கு வந்தவுடன் வீட்டு வேலைக்காரி மாலை டிபனைக் கொடுக்கும் போது,

"ரஸ்க்கைத் தொட்டான். அது இன்னும் சூடாயிருந்தது. அவனால் எடுத்துச் சாப்பிட முடியவில்லை. அவன் பாட்டியை நினைத்தான். பாட்டி அவனைத் தூக்கி மடியிலே வைத்துக் கொண்டு சூவைக் கழற்றிப் போட்டு விட்டு, காலைத் தடவிக் கொடுத்து, சூடா தோசை வார்த்து மணக்கும் சாம்பாரிலே தொட்டு ஊட்டி விடுவாள். பின் முகம் கழுவி விட்டு யூனிபார்ம் டிரஸ்ஸை மாற்றி விட்டு, வேறு உடை உடுத்தி விட்டு, அவன் அம்மா வரும் வரை தெருவில் விளையாட விடுவாள். ஆனால் இந்த ஒரு வாரமாய் இந்தக் காய்ந்த ரொட்டியும் பிஸ்கெட்டும் தான். அம்மா டிபனைக் கொடுக்கிறாள். அவனுக்குப் பிடிக்கவில்லை.

பாட்டிக்குப் பதிலா இந்தம்மாவே என்னப் பார்த்துப்பாங்கன்னு சொன்னாங்களே. இந்தம்மா சிடுசிடுங்கிறாங்க. அவனுக்குப் பிடிக்கவில்லை". என்று ஆசிரியர் ரவியின் மனநிலையை விளம்புகிறார். இதன் வாயிலாக குழந்தைகள் பள்ளி முடிந்த வீட்டுக்கு வந்ததும் அன்பாகவும் ஆர்வமாகவும் பேணுதல் இல்லாத நிலையில் அக்குழந்தையின் மனம் ஏக்கமடைகிறது என்பதைச் சுட்டிக் காட்டியுள்ளார்.

## மாற்றத்தை ஏற்க இயலாத நிலை

குழந்தைகள் இயல்பாகவே தன்னுடைய பெற்றோர் மற்றும் உடன்பிறந்தோர் மீது அன்பு கொண்டிருப்பர். ஆனால் அதே சமயத்தில் உடைமையைப் பிறர் பங்கிட்டுக் கொள்ளும் போது அம்மாற்றத்தை ஏற்க இயலாத நிலையில் குழந்தைக்குப் பொறாமை ஏற்படுவதை ஆசிரியர் 'ஊரான் பிள்ளை' என்ற நாவலில் எடுத்தியம்பியுள்ளார். இந்நாவலில் இடம்பெறும் மங்களத்திற்கு வசந்தன் பிறந்த ஒன்றேகால் வருடத்திலேயே நிரஞ்சன் பிறந்து விடுகின்றான். அதனால் குழந்தை நிரஞ்சன் பிறக்க மூன்று மாதங்கள் இருக்கும் பொழுது தான் அவள் முதல் குழந்தை வசந்தனை தாய்ப்பால் குடிப்பதை மறக்கடிப்பதற்காக முயற்சி மேற்கொண்டாள். பின்னர் நிரஞ்சன் ஒருநாள் தன் தாய் மடியில் பால் குடித்துக் கொண்டிருக்கும் போது வசந்தனின் செயலை ஆசிரியர் கூறுகிறார்.

"தான் குடித்த தாய் மடியில் தம்பி நிரஞ்சன் பால் குடிப்பதை அவனால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. மங்களத்தின் மடியிலிருந்து குழந்தையைத் தள்ள முயற்சிப்பான்."

ஆனாலும் ஒருநாள் தூங்கிக் கொண்டிருந்த தன் தம்பியின் வாயில் தன் பலம் கொண்ட மட்டும் கிள்ளி விட்டான்."

என்பதன் மூலம் குழந்தைகள் தனக்குரியதைத் தன் உடன்பிறந்த மற்றொரு குழந்தை பங்கிட்டுக் கொள்ளும் போது அம்மாற்றத்தை ஏற்க முடியாத மனநிலை உடையவராக இருப்பதைச் சித்தரித்துள்ளார் (Saroja Pandiyan, 1998).

## பெற்றோரின் தகாத ஒழுக்கமும் குழந்தைகள் இழிவுபடுத்தப்படலும்

பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளிடம் அன்பினை மட்டும் செலுத்தினால் போதாது. அவர்கள் தாம் நல்லொழுக்கத்தை பின்பற்றாத நிலையில் அவர்களது குழந்தைகள் மனச்சிக்கலுக்கு உள்ளாவதை 'ஒரு தீப்பெட்டி ஒரு விளக்கை அணைத்தது' என்ற சிறுகதையில் கூறியுள்ளார். இச்சிறுகதையில் இடம்பெறும் பத்தாம் வகுப்புப் பயிலும் கண்ணாத்தாளின் தாய் பூவாத்தா. இவள் தன் கணவனின் சகோதரனுடன் (சங்கிலி) தகாத உறவு கொள்கிறாள். இச்செயலை கண்ணாத்தாளின் வீட்டினருகில் வசிப்போர் இழிவாகப் பேசுகின்றனர்.

ஒருநாள் கண்ணாத்தா பள்ளிக்கூடத்திறக்குச் செல்லும் குழந்தைகளுடன் தானும் இணைந்து வருவதாகக் கூறுகிறாள். அப்பொழுது அக்குழந்தைகள்,

"உங்கூடப் போனா எங்கம்மா வைறாங்க. உங்கம்மா கெட்டவுங்களாமே நீ ஒன்னு முன்னால போ, இல்ல பின்னால வா, வீணா எங்களுக்கு அடி வாங்கிக் கொடுக்காத."

என்று கூறுகின்றனர். இதன் மூலம் பெற்றோர்கள் ஒழுக்க நெறியிலிருந்து பிறழும் போது அக்குழந்தைகள் உடன் பயிலும் குழந்தைகளால் புறக்கணிக்கப்படுவதைப் படம் பிடித்துக் காட்டுகிறார்.

குழந்தை தன் தாயுடன் தந்தையைத் தவிர வேறொருவர் நெருக்கமாக உறவு கொள்வதை சமூகத்திலுள்ளோர் இழிவாகப் பேசும் போது அவர்களிடம் பேசுவதைத் தவிர்ப்பதையும், வேண்டிய பொருட்களைப் பெறாத தன்மையையும் தொடர்ந்து உணர்த்தியுள்ளார். தன் தாயுடன் பேசும் சங்கிலிப் பெரியப்பாவிடம் இன்முகத்தோடு பேசுவாள். ஆனால் பெரியப்பாவையும் தன் தாயையும் இணைத்துப் பலரும் பேசுவதற்கான காரணத்தை கண்ணாத்தா வளர வளரப் புரிந்து கொள்கிறாள். அதனால் "இப்பொழுதெல்லாம் அவள் சங்கிலிப் பெரியப்பா வந்தால் பேசுவதில்லை. பள்ளிக்கூடம் போகும் போது அவரிடம் காசு கேட்பதில்லை."

என்ற கதைப்பகுதி வழி குழந்தைகளின் உடல், அறிவு வளர்ச்சிக்கேற்ப நல்லொழுக்கம் உடையவர்களை அடையாளம் காணும் திறனும் வளர்வதும் தீயொழுக்கமுடையோருடன் உறவாடாமல் தவிர்ப்பதும் புனைந்துரைக்கப்படுகிறது.

"இளம் குழந்தையின் நடத்தை, மனவளர்ச்சி, உடல் வளர்ச்சி, தசை இயக்க முதிர்ச்சி, பேசும் திறன், மனவெழுச்சி, சமூகத் தொடர்பு, அழகுணர்வு, சுவையுணர்வுத்திறன், விளையாட்டு, ஈடுபாடுகள், கல்வி போன்றவற்றில் அக்கறை, ஆளுமை, வளர்ச்சி, பெற்றோரிடமும் ஆசிரியரிடமும் நடந்து கொள்ளும் முறைகள், குழந்தைப் பருவத்திற்கே உரிய சிக்கல்கள், பெற்றோர் குழந்தையை நடத்த வேண்டிய முறைகள் ஆகிய அனைத்தும் கொண்டது குழந்தை உளவியல்"

என்பது குழந்தை உளவியல் பற்றி முனைவர் இரா.காஞ்சனா கூறும் விளக்கம் ஆகும் (Kanchana, 1997). மேற்கூறிய விளக்கத்தில் இடம்பெறும் மனவளர்ச்சி, சமூகத் தொடர்பு, ஈடுபாடுகள் ஆளுமை வளர்ச்சி ஆகியவை ஆசிரியரின் 'ஒரு தீப்பெட்டி ஒரு விளக்கை அணைத்தது' எனும் சிறுகதையில் கண்ணாத்தா பாத்திரத்திற்கு ஆதாரமாக அமைந்துள்ளன.

## மனவெழுச்சி

ஆசிரியர் சரோஜா பாண்டியன் படைப்பில் 'ஊரான் பிள்ளை' என்ற நாவலில் இடம்பெறும் வசந்தனுக்கு தன்னுடைய இரத்தத்தில் ஓர் உயிரணுவை உண்டாக்கும் சக்தி கூட இல்லை என்ற குறைபாடு தெரிந்த பின்னர் அவனிடத்தில், அச்சம் வெளிப்படும் விதம், தனித்திருக்கும் நிலை, தன்னைத் தானே துன்புறுத்தல், தனக்குத் தானே புலம்பல், சினம் வெளிப்படும் விதம் போன்ற பலவிதமான மனவெழுச்சிகள் உண்டாகின்றன.

## அச்சம் வெளிப்படும் விதம்

வசந்தன் தன் மனைவி ரேணுகாவுடன் குழந்தையின்மைக்கான காரணத்தைக் கண்டறிய மருத்துவரை நாடிச் செல்கின்றான். மருத்துவர் ரேணுகாவுக்கு உடம்பில் எந்தப் பிரச்சனையும் இல்லை என்கிறார். அதனால் வசந்தன் உடல் பரிசோதனை செய்து முடிவு வருவதற்கு முன்பு அவனுக்கு ஏற்பட்ட அச்ச உணர்வை ஆசிரியர் இயம்பியுள்ளார்.

“ஒருவருக்கும் சொல்லாமல் இரத்தத்தைப் பரிசோதனைக்குக் கொடுத்தான். ரிஸல்ட் தெரியு முன்பு புழுங்கி தவித்துப் போய் விட்டான்”. (Saroja Pandiyan, 1998)

என்பதன் மூலம் ஆசிரியர் வசந்தனுக்கு அச்சத்தால் உடல் வியர்த்ததைச் சுட்டிக் காட்டியுள்ளார். மனிதனின் அடிப்படை மனவெழுச்சிகளுள் ஒன்று அச்சம். இது வெறுப்பூட்டும் ஓர் எதிர்மறை மனவெழுச்சியாகும். தன்னால் வெற்றி பெற இயலாத போதும் ஆபத்தான நிலை ஏற்படும் போதும் ஒருவனிடம் அச்சம் தோன்றும்.

“எல்லா வயதிலும் அச்சத்தின் காரணமாக ஏற்படும் நடத்தை, ஓடி ஒளிந்து கொள்ளுதல் ஆகும். அச்சம் ஏற்பட்டவுடன் உடல் வியர்த்தல், முகம் வெளிறிப் போதல், கைகால்கள் நடுங்குதல், திகைத்துப் போதல் போன்ற உடல் சார்ந்த நடத்தைகள் வெளிப்படுகின்றன”

என அப்துல் கஹீம் அச்சம் தோன்றும் போது ஏற்படும் மெய்ப்பாடுகளை விளக்குகிறார். இந்த மெய்ப்பாடுகளுள் உடல் வியர்த்தமையைக் கூறிப் படைப்பாசிரியர் புனைந்துள்ளார்.

## தனித்திருக்கும் நிலை

மனிதன் பலரும் இணைந்திருக்கும் கூட்டத்தில் தன்னுடைய குறைகள் வெளிப்படும்படி செயல்பட்டு விடுவோமோ என்ற அச்சம் தோன்றும் போது தனித்திருக்கிறான் என்பதை ‘ஊரான் பிள்ளை’ என்ற நாவலில் சித்தரித்துள்ளார்.

இந்நாவலில் இடம் பெறும் வசந்தன் தன் மனைவி ரேணுகாவிற்கு நிகழும் வளைகாப்பு நிகழ்ச்சியல் கலந்து கொள்ளாமல் தனித்திருக்கின்றான். ஏனெனில் ரேணுகா டோனர்ஸ் முறைப்படி கருத்தரித்திருந்தாள். தான் ஒரு குழந்தைக்கு தகப்பனாக முடியாத நிலை உள்ளதா சினம் வெளிப்பட்டு ஏதேனும் செய்து விடுவோமோ என்ற நிலையில் தன்னைத்தானே தனிமைப்படுத்துகிறான்.

“அங்கு நின்றால் ஆத்திரத்தில் இப்படிச் சந்தோ~ப்படுபவர்கள் யாரையாவது பிடித்து ஆத்திரம் தீர வெளுத்து விடுவோமோ என்று அவனுக்குத் தோன்றியது. அவன் அந்த இடத்தை விட்டு யாருக்கும் தெரியாமல் நழுவினான்.” என்று கதை செல்கிறது.

## தன்னைத் தானே துன்புறுத்தல்

ஒரு மனிதன் மனநோயாளியாக காணப்படும் நிலையில் தன்னைத் தானே துன்புறுத்திக் கொள்வது உண்டு. அதாவது ஒரு மனிதன் தன்னைத் தானே உடலின் பல இடங்களிலும் காயப்படுத்திக் கொள்ளுதலும், சில செயல்களால் தன்னுடைய மனதைக் காயப்படுத்தலுமே ஆகும். டோனர்ஸ் முறையில் குழந்தை உண்டான நிலையிலும், பாத்திரங்கள் தம்மைத் தாமே துன்புறுத்திக் கொள்வதாக ‘‘ஊரான் பிள்ளை’ என்ற நாவலில் காட்சிப்படுத்தியுள்ளார். இந்நாவலில் இடம்பெறும் வசந்தனின் மனைவி ரேணுகாவுக்கு வளைகாப்பு நடைபெறும் போது,

“வசந்தன் தன் முடியைத் தானே பிய்த்துக் கொண்டான். ணங்ணங்கென்று சுவரில் முட்டினான். கைகளால் முகத்தில் அறைந்து கொண்டான். ஜன்னல் கம்பியிலே முட்டிக்கொண்டான். அவனை அறியாமல் அவன் கண்களிலிருந்து கண்ணீர் வழிந்தோடியது.” (Saroja Pandiyan, 1998)

என ஆசிரியர் விளக்கியுள்ளார். வசந்தன் தன் மனைவிக்கு டோனர்ஸ் முறைப்படி பிறந்த குழந்தை தான் தன்னை அப்பா என்று அழைக்கப்போகிறது என பிறருக்குத் தெரியாத நிலையை எண்ணி தன்னைத்தானே துன்புறுத்தும் செயலைக் காணலாம்.

## தனக்குத் தானே புலம்பல்

ஒரு மனிதன் தன்னுடைய மனதிலுள்ள எண்ணங்களைப் பகிர்ந்து கொள்ள முடியாத நிலையில் தனக்குத் தனக்குத் தானே புலம்புவதாக 'ஊரான் பிள்ளை', நாவல்pல் காட்சிகள் அமைந்துள்ளன.

இளையோர் ஈடுபடும் எந்தச் செயலிலும் மனவெழுச்சி தோன்றும் என்பது அப்துல் கஹீமின் கருத்து ஆகும். ஆசிரியர் சரோஜா பாண்டியனின் 'புரையோடிய பொன்' நாவலில் அன்னம் என்ற பாத்திரத்தின் மனவெழுச்சி புறக்காரணங்களால் தூண்டப்படுவதைக் காண முடிகிறது.

"மனவெழுச்சி என்பது ஒருவனின் உடல், உள்ள உணர்வுகள் முழுவதும் எழுச்சி பெற்றுச் செயல்படுகின்ற நிலையையே குறிக்கும். இத்தகைய மனவெழுச்சி தானாகத் தோன்றாமல் அகம், புறக் காரணிகளால் தூண்டப்படுகின்றன" என்கிறார்.

"இளையோரின் நோக்கங்கள் நிறைவேறிய போதும், அல்லது தடை செய்யப்படும் போதும், அவர்கள் துன்புறுத்தப்படும் போதும், தங்களின் எதிர்பார்ப்புகள் பாதிக்கப்படும் போதும், தங்களின் குறைகள் பற்றித் தெரிய வரும் போதும் மனவெழுச்சிகள் எழலாம். சுருங்கக்கூறின் அவர்கள் தங்களைப் பற்றிக் கொண்டுள்ள கருத்துக்களுடன் மாறுபட்டு முரண்பட்டு நிகழும் எந்த நிகழ்ச்சியும் அவர்களிடம் மனவெழுச்சியைத் தோற்றுவிக்கலாம்." அப்துல் கஹீம் கூற்றின்படி வசந்தனுக்கு தன் குறையைப் பற்றித் தெரிய வரும்போது அவன் மனவெழுச்சிக்கு உள்ளாவதை காண முடிகிறது.

## முடிவுரை

ஆசிரியர் சரோஜா பாண்டியனின் படைப்புகளில் குழந்தைகளுக்கு மனச்சிக்கல் உருவாவதற்கு கீழ்க்கண்ட நிலைகள் காரணங்களாக அமைந்துள்ளன. அவையாவன 1. உறவை இழந்த நிலை 2. மாற்றத்தை ஏற்க இயலாத நிலை 3. புறக்கணிக்கப்படும் நிலை 4. பெற்றோரின் தகாத ஒழுக்கத்தால் குழந்தைகள் இழிவுபடுத்தப்படும் நிலை ஆகியவை ஆகும். அச்சம் வெளிப்படும் விதம், தனித்திருக்கும் நிலை, தன்னைத் தானே துன்புறுத்தல், தனக்குத் தானே புலம்பல், சினம் வெளிப்படும் விதம் போன்ற பலவிதமான மனவெழுச்சிகள் உண்டாகின்றன அச்சம், வெளிப்படும் விதம், தனித்திருக்கும் நிலை, தன்னைத் தானே துன்புறுத்தல், தனக்குத் தானே புலம்பல், சினம் கொள்ளல் ஆகியவற்றால் மனவெழுச்சி உண்டாவதைக் கூறியுள்ளார்.

## References

Kanchana, R. (1997) Ilakiyamum Ulaviyalum, Vishnupriya pathippagam, Madurai, India

Natarajan, (1990) Thiranaayvu Kolkaikal, Annam Veliyedu, Sivagangai, India

Saroja Pandiyan, (1998) Uran Pillai, Manimekali Presuram, Chenani, India

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License